# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2040/12 - 2017 ඔක්තෝබර් මස 11 වැනි බදාදා - 2017.10.11

*2040/12 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 11 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்*

*குறிப்பு இல.: 2/2/1/136.*
*காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/10/2016/E/04.*

*ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.*

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

*வட மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், கம்பஹா பிரதேச செயலாளர் பிரிவில், பெண்டியமுல்ல கிராமத்தில், 234 பெண்டியமுல்ல வடக்கு கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள சிரேஷ்ட நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இ. பி. ගම්. 4065 வரைபடத்தில் துண்டு இல. 01 எனக் காட்டப்பட்ட 0.0489 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட காணித் துண்டு:*

*1.* **துண்டு இல.** *1*

*காணியின் பெயர் : தவட்டகஹவத்தை; விபரம்: வீட்டுத் தோட்டம், 3 நிரந்தரக் கட்டிடங்கள், தற்காலிகக் கட்டிடமொன்று, சீமெந்தினால் கட்டப்பட்ட கிணறொன்று மற்றும் கலப்புப் பயிர்ச் செய்கை காணப்படுகின்றன ; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: கே. டி. எல். சீ. ஜயவர்தன, இல. 32/24, இரண்டாம் ஒழுங்கை, சியனே வீதி, கம்பஹா; விஸ்தீரணம் : 0.0489 ஹெக்டயார்.*

*மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 22 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு கம்பஹா கிழக்கு பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.*

*சீ. பீ. டபிள்யூ. குணதிலக,*
*பிரதேச செயலாளர் மற்றும்*
*காணி எடுத்தல் அலுவலர்,*
*கம்பஹா.*

*பிரதேச செயலகம்,*
*கம்பஹா,*
*2017, ஒற்றோபர் 10.*

*10 – 1164*

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

*பிரதேச செயலாளரின் குறிப்பு இல.: 6/3/7/15/21/3.*
*காணி அமைச்சின் குறிப்பு இல.:* LD/ 05/ 2007/ MV/ 285.

*காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் பிரகாரம் 02.02.2016 ஆந் திகதிய, இலக்கம் 1952/13 ஐக்கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில்* 4A *பக்கத்தில் தொடர் இலக்கம் 65 இன் கீழ் குறிப்பிடப்பட்டிருந்த "துண்டு இல. 1169" என்பது அது "துண்டு இல. 1170" எனத் திருத்தப்படல் வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*ஆத்மா திலுக்ஷி ஜயரத்ன,*
*பிரதேச செயலாளர்,*
*நாவுல.*

*பிரதேச செயலகம்,*
*நாவுல,*
*2017, ஒற்றோபர் 04.*

*10 - 1165*